பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 13 வியாழக்கிழமை 29.08.2024 கதிர் 295

## சஜித்தின் தேர்தல் அறிக்கையில்
# சமஷ்டித் தீர்வை வெளிப்படுத்தின் புறக்கணிப்பு முடிவு மீள்பரிசீலனை
## தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

ஒற்றையாட்சி -முறையை ஒழித்து சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவருவேன் என்று சஜித் பிரேமதாச தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியளித்தால் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவை மீள்பரிசீலனை செய்யத் தயார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21 இல் நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவைக் கோரி சஜித் பிரேமதாச அனுப்பிய கடிதத்திற்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே அந்தக் கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளது. ஓகஸ்ட் 28 இந்தப் பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஸல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2024.08.11 திகதியிட்ட கடிதம் மூலம் எமது கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எழுதிய கடிதம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாடுகளை ☞2

## இனி அது ரகசியம் அல்ல!

தெற்குத் தேர்தல் களத்தின் திருக்கூத்துக்கள் குறித்து நேற்று சில தகவல்களைத் தந்திருந்தேன். மேலும் சில தகவல்களைத்தான் இன்று உங்களோடுபகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் ☞2

## திருத்தம் '13' முழுதாக ரத்து அதிகாரப் பகிர்வு கிடையாது
### சிங்களவர்கள் எனக்கே வாக்களியுங்கள் வேட்பாளர் சீலரத்ன தேரர் தெரிவிப்பு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்துச் செய்து அதிகார பகிர்வு என்பதை முடிவுக்கு கொண்டு வருவேன். அதேபோன்று ஷரியாசட்டத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டேன். அதற்காக சிங்களவர்கள் எனக்கு வாக்களிக்க வேண்டும் என ஜனசேனா முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியில் சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்படும். சிங்களவர்களின் இனப்பரம்பல் தற்போது சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

சிங்களவர்களின் பொருளாதார ☞2

## தடை விதிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். அலிசாஹிர் மௌலானாவின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதைத் தடுக்கும் வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மற்றும் செயலாளர் நாயகத்திற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அலி சாஹிர் மௌலானாவினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டினை ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் ஆகியோருக்கு எதிராகவே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு செப்டெம்பர் 11 வரை அமுலில் இருக்கும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் ஓகஸ்ட் 4 கூடித் தீர்மானித்தது.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க கட்சி தீர்மானித்திருந்த உயர்பீடக் கூட்டத்தில் தான் பங்கேற்கவில்லை என்றும், அந்த முடிவு தனக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் முறைப்பாட்டாளர் ☞2



## கடவுச் சீட்டுக்காக 5 நாள்களாக காத்திருந்தவர்களால் குழப்பம்
### பொலிஸார் வந்த பின்பே கட்டுக்கு வந்தது

வவுனியா, மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் முன்பாக நேற்று ஏற்பட்ட அசாதாரண நிலைமையினையடுத்து அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் சாதாரண சேவையின் கீழ் 25 நபர்களுக்கும், ஒருநாள் சேவையின் கீழ் 25 நபர்களுக்கும். ☞8

## ரணிலை ஒருபோதுமே ஆதரிக்கமாட்டோம்
### ரெலோ தலைவர் நேற்று அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை ரெலோ ஒருபோதும் ஆதரிக்காது. நாம் மூவர் ஜனாதிபதியை சந்தித்த தற்காக எம் மீது சேறு பூச முனைகிறார்கள் என்றார் ரெலோ தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியாவில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து நேற்று துண்டறிக்கைகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

எமது மக்கள் எமது இலட்சியபாதையிலேயே பொது வேட்பாளருக்கு கட்டாயம் வாக்களிப்பார்கள் எனகருதுகிறேன். மேலும் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் பொது வேட்பாளருக்கு எதிராகக் கூறும் கருத்துக்கள் அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். எங்களுடைய கட்சி ஒரு ஜனநாயக ரீதியான கட்சியாகும். அது பொது ☞8

## பொது வேட்பாளரை ஆதரித்து வவுனியாவில் துண்டறிக்கை
### களத்தில் இறங்கிய பொதுக் கட்டமைப்பு கட்சிகள்

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள ப. அரியநேத்திரனை ஆதரித்து வவுனியா நகரில் நேற்று துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன.

தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலைய பகுதியில் இந்த நிகழ்வு நேற்று ☞8

## தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தால் நாணய நிதியத்தின் திட்டம் முடங்கும்
### கலாநிதி ஹர்ஷ டி சில்வா எதிர்வுகூறல்

தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள கொள்கை அறிக்கைக்கு அமையச் செயற்பட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய வேலைத் திட்டம் முற்றாக முடங்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ☞2

## அநுர வென்ற அடுத்த நொடியே நாடாளுமன்றம் கலைக்கப்படும்

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர திஸாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியான ஒரே நொடியில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்ற தேர்தல் வரை அமைச்சுக்களின் செயலாளர்கள் ஊடாகவே ஆட்சி கொண்டு நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிரச தொலைக்காட்சியில் இடம்பெற்ற போர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் ☞2

## ரணில் தோற்றால் பலர் நாட்டைவிட்டே ஓடுவர்
### ராஜித சேனாரத்ன சொல்கிறார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் பலர் நாட்டை விட்டு வெளியேறுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ☞2

## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பொதுக் கட்டமைப்பை திருத்தும்
### வினோ எம்.பி. கருத்து

பொதுவேட்பாளரை ஆதரிக்கும் தமிழ் பொதுக் கட்டமைப்பினர் திருந்துவதற்கான ஒரு வாய்ப்பினை தேர்தல் முடிவுகள் நிச்சயம் உணர்த்தும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

முன்னர் நான் எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. எனது கட்சியாகிய ரெலோ வேறு ஒரு முடிவு எடுத்திருக்கலாம். என்னைப் பொறுத்தவரை எடுத்த முடிவில் மாற்றம் இல்லை. பொதுவேட்பாளருக்கு ஆதரவாக நான் பரப்புரை செய்யப் போவதில்லை. பொது வேட்பாளருக்கு ஆதரவில்லாத நிலைப்பாடுகள் அங்கத்துவ கட்சி உறுப்பினர்களிடத்திலும் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வேட்புமனு தாக்கல் செய்த மூன்று வேட்பாளர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் இல்லையாம்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் முன்னிலையான நிலையில், அவர்களில் ஒருவர் சமீபத்தில் காலமானார். இறந்தவரின் மாற்று இன்னும் பெயரிடப்படவில்லை.

மீதியாக இருக்கும் 38 பேரில் 15 பேர் மட்டுமே குறைந்தது 10 பேரையாவது கூட்டி கூட்டம் நடத்தியுள்ளனர். அதாவது 'பொக்கெட் மீட்டிங்' என்ற கூட்டத்தையேனும் 15 பேர் மாத்திரமே ஏற்பாடு செய்திருந்தனர்.

இன்னும் 23 உள்ளனர். அவர்களில் 3 பேர் எங்கென்றே தெரியவில்லை.

தேர்தல்ஆணைக்குழுவிற்குவழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு விடுத்தால், அந்த 3 இல் இரண்டு பேரின் இலக்கங்களுக்கு வேறு தரப்பினரே பதில் வழங்குகின்றனர். மற்றையநபர்தொலைபேசி அழைப்பை துண்டிக்கிறார்.

அந்த 3 பேரும் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று வேட்பு மனுவில் கையெழுத்திட்டிருக்கின்றனர். கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். அதைத்தவிர எங்கும் தங்களைஅறிமுகப்படுத்திக்கொள்ளவில்லை. தாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்று ஊடகங்களில்கூட அவர்கள் அறிக்கைகள் விடவில்லை.

வேட்பாளர்களான அந்த 23 பேரில் 5 பேருக்கு சமூக ஊடகங்களின் கீழ் பேஸ்புக் கணக்கு கூட இல்லை.

வேட்பாளர்களில் 15 பேரைத் தவிர, மற்றைய23பேரையும்தகவல்தொடர்புக்குகூட அணுக முடியவில்லை.

'அததெரண' தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. அதனையே உங்களுக்குத் தந்திருக்கின்றேன்.

................

ஜனாதிபதித் தேர்தல் பணம் உழைப்பதற்கான வழியாகவும் காணப்படுகின்றது என்கிற மற்றொரு சுவாரஸ்யமான தகவலும் உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட முன்வந்துள்ள பதினைந்து பேர், தமது பரப்புரைக்கு என்று தெரிவித்து பல வழிகளிலும் நிதி திரட்டுகிறார்களாம். ஆனால் அவர்கள் திரட்டும் நிதிக்கு அமைய எந்தப் பரப்புரைகளிலும் அவர்கள் ஈடுபடவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மக்கள் மற்றும் பிரசாரத்துக்குப் பதிலாக பல்வேறுவழிகளில்பணம்சம்பாதிப்பதாகவும், வேறுவழிகளில்ஈடுபடுவதாகவும்தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத்தகவல்கிடைத்துள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக என்று கூறி இப்படிப் பல்வேறு நபர்களிடம் பணம்மற்றும்பொருட்கள்வசூலிக்கப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் தற்போது தேர்தல் ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகிறது.

சில வேட்பாளர்கள் இதுவரை கட்சி அலுவலகம் கூட திறக்கவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சமஷ்டித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளும் நோக்கில் இக்கடிதத்தினை எழுதுகின்றேன்.

2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச அரசுக்கு எதிராக நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் விளைவாக ஜனாதிபதிப் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களால் வாக்கெடுப்பு மூலம்ஜனாதிபதியொருவரைத்தெரிவுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன் போது நீங்கள் எமது ஆதரவினைக் கோரி எம்மை அழைத்து சந்தித்தீர்கள்.

அச்சந்திப்பின் போது, இலங்கையினை பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டும் வகையில், ஒற்றையாட்சி அரசரமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசியல் யாப்பு கொண்டுவரப்படல் வேண்டியதன்அவசியத்தினைஎமதுதலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உறுதியாக வலியுறுத்தியிருந்தார். எனினும் அத்தகைய உறுதிப்பாடுகள் கிடைக்காத நிலையில் நாடாளுமன்றத்தில்இடம்பெற்றஜனாதிபதியை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பிலிருந்தும் நாம் விலகியிருந்தோம் என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

எமது அரசியல் இயக்கத்தினைப் பொறுத்தவரை..

• ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு வடிவிலான தீர்வும் தமிழ்மக்களது இனப்பிரச்சினையைத்தீர்க்கப்போவதில்லை.

•ஒற்றையாட்சிக்குட்பட்ட13ஆம்திருத்தம் தீர்வுமல்ல;தீர்வுக்கானதொடக்கப்புள்ளியுமல்ல.

•மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் (2016- - 2019) தயாரிக்கப்பட்ட இலங்கைக்கான புதிய அரசரமைப்பு வரைபானது 'ஏக்கிய இராச்சிய' அடிப்படையிலானது என்பதனை சுட்டிக்காட்டுவதுடன் - அதனை நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம்.

கடந்த 76 வருடங்களாக இலங்கையின் அனைத்து மதங்களுக்கும், இனங்களுக்கும் சம அந்தஸ்தை வழங்க மறுத்து, தேசிய இனங்களுக்கிடையில் தீராப்பகையையும் வெறுப்பையும் தீவிரமாக்கி, தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புப் போருக்கு வழிகோலியதுடன் போர் முடிவடைந்து 13 வருடங்களின் பின்னர் நாடு பொருளாதார வங்குரோத்து நிலை அடைவதற்கும் காரணமாக அமைந்தது தற்போதய ஒற்றையாட்சி அரசமைப்பேயாகும்.

எனவே தோல்வியடைந்த அந்த ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படாதவரை சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிப்பதில்லை என்றும் - ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்களும் புறக்கணிக்க வேண்டும்என்றகொள்கைநிலைப்பாட்டுடன், வடக்கு - கிழக்கு தமிழர் தேசத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

கடந்த 75 வருடங்களாக புரையோடிப் போயுள்ள சிறிலங்காவின் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், அனைத்து இன, மத மக்களும் நிம்மதியாக, அச்சமின்றி வாழ்வதற்கும், புலம்பெயர் தமிழ்மக்கள் அச்சமின்றி முதலீடுகளை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு நாட்டுக்குள்இரண்டுதேசங்களாகவாழக்கூடிய சமஸ்டி அடிப்படையிலான தீர்வே ஒரே வழியாகும் என்பதே எமது கொள்கை நிலைப்பாடாகும்.

இதனடிப்படையில்..

•ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படல் வேண்டும்.

•இணைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

•மதசார்பற்றதாக இருத்தல் வேண்டும்.

•தமிழர் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

•தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

•இவற்றின் அடிப்படையில் சமஸ்டித் தீர்வு எட்டப்படல் வேண்டும்.

கடந்த 70 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக் குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையைக் கோரி நிற்கும் தமிழ் மக்கள் கடந்த 2009 ஆம் ஆண்டின் பின்னரும் தமிழர் தேசத்தின் மீது தீவிரமாக்கத் தொடரும் கட்டமைப்பு சார் இவழிப்பினைத் தடுக்க மேற்படி அங்கீகாரம் அவசியமானதெனக் கருதுகின்றார்கள்.

எனவேஎதிர்வரும்செப்ரெம்பர்21ஆம்திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல்தொடர்பில்எமதுஆதரவினைதாங்கள் கோரியுள்ள நிலையில் - எமது ஆதரவு தேவைப்படும் ஜனாதிபதி வேட்பாளராகிய தாங்கள் - கடந்த 76 வருடங்களாக இலங்கையின் தோல்விக்குக் காரணமான ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து சமஸ்டி அரசமைப்பைக் கொண்டுவருவதன் மூலம் மட்டுமே அனைத்து இனங்களையும் அரவணைத்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற உண்மையை தங்களது தேர்தல் அறிக்கையில் வெளியிடுவதன் மூலம், நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நீங்கள் மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் தீர்வுகாண விளைகின்றீர்கள் என்ற உண்மை இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு தேர்தல் அறிக்கையில் மேற்படி விடயங்கள் தெளிவாகவும் முழுமையாகவும்உள்ளடக்கப்படும்நிலையில், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற நிலைப்பாட்டினை மீள்பரிசீலனை செய்வது தொடர்பாக நாம் ஆராய முடியும் என்பதனையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம.

(100)

## தேசிய மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியினால் தயாரிக்கப்பட்ட மாற்றுக் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை மீது மீண்டும்பேச்சுநடத்தப்பட்டால்,இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையில் தற்போதுள்ள நீட்டிக்கப்பட்ட கடன் வசதி எவ்வாறு முன்னெடுக்கப்படும்?

கடன் நிலைப்புத்தன்மை பகுப்பாய்வு அனைத்து நிதி இலக்குகளின் அடிப்படையாகவும், கடன் மறுசீரமைப்பின் அடிப்படையாகவும் உள்ளது. எனவே தேசிய மக்கள் படைக்கு வாக்க ளிப்பது என்பது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதற்குச் சமம் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

எனவே ரணில் விக்கிரமசிங்க என்ற நபருக்காக அல்ல, நாட்டுக்காகவே மக்கள் இம்முறை வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் திறமை இருப்பதாகவும், வேறு ஒருவருக்கு வாய்ப்பளிக்க விரும்பவில்லை என்றும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும், தாம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாகக் குற்றம் சுமத்தி, எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் இன்றி தமது கட்சி உறுப்புரிமையைப் பறிக்கும் வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருத்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை குறித்து மகாநாயக்க தேரர்கள் அவதானம் செலுத்தி ஏழ்மையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இல்லையேல் சிங்கள இனமும், பௌத்த சாசனமும் இல்லா தொழியும்.

225நாடாளுமன்றஉறுப்பினர்கள்தம்மை தெரிவுசெய்த மக்களை பற்றி சிந்திப்பதில்லை. தம்மையும், தமது குடும்பத்தையும் வளப்படுத்திக் கொள்கிறார்கள். இந்த நிலைமையை நாங்கள் மாற்றியமைப்போம். எமக்கு ஆணை வழங்கினால் நாட்டை தன்னிறைவடைய செய்வோம்.

இது சிங்கள பௌத்த நாடு ஆகவே சிங்களவர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் எமக்கு வாக்களிக்க வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்தாகச் சொல்பவர்கள், இயலும்என்றுகுறிப்பிட்டுக்கொள்கின்றவர்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியுள்ளார்கள்.

தெற்கு துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் தென்மாகாணம் சீன காலனியாக மாறினால் சீனர்களும் இலங்கையில் குடியுரிமை கோருவார்கள்.

அவர்களுக்கு தென்மாகாணத்தை தனி பிராந்தியமாக வழங்க நேரிடும். நான் குறிப்பிடுவது இன்று நகைப்புக்குரியதாக இருக்கலாம். ஆனால் என்றோ ஒருநாள் சிங்களவர்கள் எனது கருத்தை சிந்தித்துப் பார்ப்பார்கள்.

சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் அவரவரின் மொழி உரிமையை கொடுக்க வேண்டும். இலங்கையில் சுதேச முஸ்லிம்கள் வெளிநாட்டு முஸ்லிம்களின் வருகையினால் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

ஷரியா சட்டத்தை ஒருபோதும் நாங்கள் செயற்படுத்த இடமளிக்க முடியாது. இங்கு வாழ விருப்பமில்லாதவர்கள் ஷரியா சட்டம் உள்ள நாடுகளுக்கு தாராளமாகச் செல்லலாம்.

கேள்வி -பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் உங்களின் திட்டம் அல்லது கொள்கை என்ன, வற்வரியை நீக்குவீர்களா ?

பதில் - - பொருளாதார நிபுணர்களுடன் கலந்துரையாடி பொருளாதார கொள்கைத் திட்டங்களை வகுக்க வேண்டும். வற்வரியை நீக்கினால் நாட்டை எவ்வாறு நிர்வகிப்பது? உணவுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை நீக்குவேன்.

கேள்வி - அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன ?

பதில்--13ஆவதுதிருத்தத்தைமுழுமையாக இரத்து செய்வேன். இந்த திருத்தத்தால் எவருக்கும் நல்லது நடக்கவில்லை.மாகாண சபை முறைமை வெள்ளை யானை போன்று பயனற்றது. உள்ளூராட்சிமன்றங்கள் போதும் மாகாணங்களை நிர்வகிப்பதற்கு.

அதிகார பகிர்வுக்க இடமில்லை. என்னை ஜனாதிபதியாகதெரிவுசெய்தால்அரசமைப்பின் 13 ஆவது திருதத்தை முழுமையாக இரத்து செய்து அதிகார பகிர்வு என்பதற்கு முடிவு கட்டுவேன் என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# சஜித் பிரேமதாசவை ஆதரித்து பொத்துவிலில் பிரசார கூட்டம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் மாபெரும் பிரசார கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் மாவட்டத்தின் அரசியல் பிரதிநிதிகள், கட்சிகளின் உயர் பீட உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

(05)







# தபால்மூல வாக்கு சான்றிதழ் அலுவலர்கள் பயிற்சி திட்டம்







(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதி தேர்தல் 2024 தபால் மூல வாக்குச் சான்றிதழ் அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான சிந்தக அபேவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறை, அம்பாறை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்கவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இதன் போது அம்பாறை மேலதிக மாவட்ட செயலாளர் எஸ். ஜெகராஜன் கலந்து கொண்டதுடன் 186 சான்றிதழ்பெற்ற அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இராணுவம், பொலிஸ், சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அனைத்து அரச நிறுவன அதிகாரிகள் மற்றும் தேர்தல் அலுவலக அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

திர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தல்கள் தொடர்பாக மேற்குறித்த நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.(05)



# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

(பி.கேதீஸ்)

கொழும்பு சங்கமித்தை மாவத்தையை வசிப்பிடமாக கொண்டவரும் டனிஸ் ட்றேட் சென்டர் உரிமையாளருமான பிரபல வர்த்தகர் மாசிலாமணி டேனியல் அகில ,லங்கை சமாதான நீதிவானாக கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.எஸ்.பண்டார ,ளங்கசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

,வர் தலவாக்கலை பெல்கிறேவியா தோட்டத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு நகரை வசிப்பிடமாகவும் கொண்டவர். அதேபோல் சமூகப்பற்றுமிக்க ,வர் தலவாக்கலை பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பிரபல போதைப்பொருள் வர்த்தகரின் மகன் விமான நிலையத்தில் கைது

பிரபல போதைப்பொருள் வர்த்தகரான ஷிரான் பாசிக்கின் மகன் நதீன் பாசிக் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வெள்ளவத்தையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது விசேட அதிரடிப்படையின் அதிகாரி ஒருவரை தாக்கி விட்டு நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சுற்றிவளைப்பின் போது 19 கிராம் ஹெரோயின், கைத் தொலைபேசிகள், மடிக்கணனி, வெளிநாட்டு நாணயத்தாள்கள், சாரதி அனுமதிப் பத்திரம், டுபாய் நாட்டு அடையாள அட்டை, ஆகியவை கைப்பற்றப்பட்டிருந்தன.

மேலும், சந்தேகநபர் பல்வேறு நபர்களுடன் மேற்கொண்ட பண பரிவர்த்தனைகளை விவரிக்கும் ஆவணங்கள் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுக்கு தப்பிச் சென்ற நதீன் பாசிக் நாடு திரும்பிய நிலையில் நேற்று (புதன்கிழமை) விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# சாய்ந்தமருது பாடசாலைக்கு 2 கணினிகள் அன்பளிப்பு



(எம்.எஸ்.எம். ஸாகிர்)

சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்திற்கு கல்முனை ஒளிரும் நட்சத்திரங்கள் அமைப்பால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக 2 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கணனிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அதிபர் எம். எஸ்.எம். ஆரிப் தலைமையில் கடந்த திங்கட்கிழமை காலை ஆராதனையின் போது இடம்பெற்றது.

இந் நிகழ்வில், ஒளிரும் நட்சத்திரங்கள் அமைப்பின் சார்பாக அதன் ஸ்தாபகத் தலைவி திருமதி பஸீரா றியாஸ் மற்றும் அதன் உறுப்பினர்களான திருமதி றிஸ்னா சுபைர் மற்றும் திருமதி பெரோஷா காரியப்பர் ஆகியோர் கலந்துகொண்டு கணனிகளை வழங்கி வைத்தனர்.

சிறுவர்களுக்கான கல்வி, பெண்கள் அபிவிருத்தித் திட்டம், ஜனாஸா நல்லடக்கத்தில் உதவி போன்றவற்றில் தங்களது பங்களிப்பை வழங்குவது குறித்த அமைப்பின் மிக முக்கிய சேவைகளாக இருந்து வருகிறது. அத்துடன் ஏனைய பல சேவைகளையும் ஒளிரும் நட்சத்திரங்கள் அமைப்பு செய்து வருகிறது.

சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் தகவல் தொழிநுட்ப பாடத்தை கற்கும் மாணவர்கள் தரம் 1 தொடக்கம் 9 ஆம் தரம் வரை மாணவர்கள் இருந்தும் இங்கு கணினி ஆய்வுகூடமோ, கணனி அறைகளோ, கணனிகளோ இல்லாத மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது.

அதனையிட்டு பாடசாலையின் பிரதி அதிபர் எம்.எச்.யூ. றினூபா குறித்த அமைப்பிடம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் 2 கணினிகளை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர்.

இங்கு உரையாற்றிய திருமதி பஸீரா றியாஸ், மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் இப்பாடசாலைக்கு நல்லுள்ளம் படைத்தவர்கள் இதுபோன்று இன்னும் பல உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்றும் இம் மாணவர்களின் கல்வியின் நலனில் அதிக அக்கறை கொண்டு தங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த உதவியை வழங்கிய அமைப்பின் ஸ்தாபகத் தலைவி பஸீரா றியாஸ் உட்பட அமைப்பின் உறுப்பினர்களுக்கு பாடசாலையின் அதிபர் எம்.எஸ். எம்.ஆரிப் மற்றும் பாடசாலை சமூகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

திருமதி பஸீரா றியாஸ் மற்றும் திருமதி தஸ்னீம் காரியப்பர் ஆகியோர் குறித்த அமைப்பின் ஸ்தாபகர்களாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐ.நா. தீர்மான நீடிப்பு அவசியம்

அரசுத் தலைவர் தேர்தல், தமிழ் பொது வேட்பாளர் பரபரப்புக்களுக்குமத்தியில்தமிழர்தரப்புக்கள்ஜெனிவாவை மறந்திபோயிருந்த தருணத்தில் அதனை அவர்களுக்கு ஞாபகப்படுத்தியுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச் சட்ட மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் கண்காணிப்பதற்குமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்ட பொறிமுறைக்கான ஆணையை மீண்டும் ஒரு தடவை நீடிக்கும்படி மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் செப்டெம்பர் 9 தொடங்கவுள்ளது. அதனையொட்டி இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தில் மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சமகாலப்போக்குகள் உள்ளடங்கலாக நாட்டின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டர்க்கினால் கடந்த வாரம் விரிவான அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான தமது நிலைப்பாடு மற்றும் இலங்கை விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை என்பவற்றைக் குறிப்பிட்டு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்த அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கோரிக்கையை ஏற்று இலங்கை மீதான கண்காணிப்பையும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பணியையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடரவேண்டியது அவசியம். குறைந்தது இன்னும் இரண்டு வருடங்களுக்காவது அது தொடரவேண்டும்.

பொருளாதார நெருக்கடி மற்றும் தெற்கில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங்கையின் இனப்பிரச்சினை, நிலைமாறுகால நீதி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் என்பன மறக்கப்பட்ட விடயங்களாகிவிட்டன. ஆளும் தரப்புக்கள் இப்போது அது பற்றிக்கிஞ்சித்தும்அக்கறைகொள்வதில்லை. ”குளிர்விட்டுப் போய்விட்டது” என்பதைப் போல, போருக்குப் பின்னரான 15 வருடங்களாக அனைத்துல மட்ட அழுத்தங்களைச் சமாளித்து வந்துள்ள இலங்கை ஆளும்தரப்பு இந்த விவகாரங்களை புறமொதுக்கு வைத்துவிட்டன.

இந்தஆபத்தானபோக்கைஉணர்ந்திருந்தும்அதற்கெதிராக உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க முடியாத கையறு நிலையில்தமிழ்இனம்விடப்பட்டுள்ளமைபரிதாபத்துக்குரியது. தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியதன் மூலம் இந்த நிலமைகளில் மாற்றம் வந்துவிடப்போவதில்லை. பொது வேட்பாளரை நிறுத்தியதன் மூலம் பன்னாட்டுச் சமூகம் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது என்று நாமே வேண்டுமானால் நமது தோளில் தட்டிக்கொள்ளலாமே தவிர வேறு எந்தப் பயனும் வந்துவிடப்போவதில்லை. இருந்தாலும் இந்தப் பரபரப்பில் ஐ.நா. தீர்மானம் குறித்த விடயம் தமிழர் தரப்பிலும் கண்டுகொள்ளப்படாத நிலையை எட்டியது வருத்தத்துக்குரியது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2022 நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் 2 ஆண்டுகளில்இப்போதுமுடிவுக்குவரும்நிலையில், அதனைப் புதுப்பிக்காது விட்டால் இலங்கை மீதான குறைந்தபட்ச கண்காணிப்பும்கூட விலக்கப்பட்டுவிடும். அத்தோடு எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் முன்னெடுக்கப்படக்கூடிய சர்வதேச விசாரணைக்கான ஆதாரங்களைத் திரட்டுவதும் நின்றுபோய்விடும். கடந்த 2 வருடங்களில் ஐ.நா. திரட்டிய ஆதாரங்கள்போக, மேலும்பலஆதாரங்கள்திட்ப்படவேண்டிய நிலையில் உள்ளன. இன்றில்லாவிடினும் என்றாவது ஒருநாள் தமிழர்களுக்கு நீதி கிடைக்க அது முக்கியம். எனவே சாத்தியமான அனைத்து ஆதாரங்களையும் திரட்ட வசதியாக ஐ.நா. தீர்மானம் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்காவது நீடிக்கப்படுவது அவசியம்.



## உணவும் உள்ளமும்

**வெ. இன்சுவை**

ஒரு 100 கிராம் எடை ஒரு நாட்டின் பெருமையை, விதியை மாற்றிவிட்டதே! இப்படியெல்லாம்கூட இருக்குமோ என்று பெரும்பாலானோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இந்நிகழ்வு பெரிய அதிர்வலையை ஏற்படுத்தி விட்டது.

ஓர் இரவுக்குள் உடலின் எடையைக் குறைக்க, அந்த இந்திய வீராங்கனை எடுத்த முயற்சிகள் எத்தனை! தன்னை அவர் எந்த அளவுக்கு வருத்திக் கொண்டார் என்பதைத் தெரிந்து கொண்டதும் வேதனை ஏற்பட்டது. பதக்கம் பெற்றிருந்தால் அவருடைய அத்தனை வலிகளும் மறந்து போய் இருக்கும். ஒரு வாக்கியத்தை நிறுத்தற்குறிகள் எப்படி பொருள் மாற்றி விடுமோ, அப்படி 100 கிராம் செய்துவிட்டது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, உணவு பற்றியோ, உடல்எடை பற்றியோ அவ்வளவாக யாரும் பொருட்படுத்தியதில்லை. அதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற எண்ணம் கூட உதித்தது இல்லை. சத்தான உணவு, பழங்கள், காய்கறிகள், கீரைகள் இவற்றை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் நினைத்ததில்லை.

தினந்தோறும் பழம் வாங்கும் வழக்கமும் இருந்தது இல்லை. வீட்டுக்கு வரும் உறவினர்கள் பழங்கள்வாங்கிவருவார்கள். அதுவும்வாழைப்பழம், தோடம்பழம், கொய்யா ஆகியவைதான் இருக்கும். வீட்டுக்கு வீடு பப்பாளி மரம் இருக்கும். ஆனால் அப்பழத்தின் அருமை தெரியாததால் விரும்பி சாப்பிட்டதில்லை. வீட்டுசமையல்ஆரோக்கியமானது, அவ்வளவுதான். வேறு கேள்வி கிடையாது.

தற்போது சமூக ஊடகங்களின் காரணமாக 'உடல்' பற்றிய அக்கறை, 'உணவு' பற்றிய விழிப்புணர்வு அதிகம் ஏற்பட்டுள்ளது. இளமையான தோற்றத்துடன் இருக்கவேண்டும்; அதிக உடற்பருமன்கூடாது; ஆரோக்கியமாக இருக்கவேண்டும்; சத்தான உணவு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அதீத கவனத்துடன் இருக்கிறார்கள். அதற்காக அவர்கள் நிறைய தியாகம் செய்கிறார்கள். நிறைய மெனக்கெடுகிறார்கள்.

வாயையும், மனசையும் கட்டி, வயிற்றைக் காயப்போடுகிறார்கள். அவர்களுக்கு இரத்தக் கொதிப்போ, நீரிழிவு நோயோ இல்லை. ஆனாலும் முன்னெச்சரிக்கையாக உப்பு, ஊறுகாய், இனிப்பு, இன்ன பிற எண்ணெய் பலகாரங்களையும் தவிர்த்து விடுகிறார்கள். குறைந்த அளவே சாப்பிடுகிறார்கள். நாள்முழுவதும்சுறுசுறுப்பாகஇயங்கிக்கொண்டிருக்க அவர்களால் எப்படி முடிகிறது?

சமையலில் எந்தக் குறையையும் கண்டு பிடிப்பதில்லை. ஒரு தவயோகி போல, வாழ்க்கையை கட்டமைத்துக் கொண்டுள்ளார்கள். யார், எவ்வளவு வற்புறுத்தினாலும் ஒரே ஒரு வறுத்த முந்திரியைக்கூட வாயில் போடமாட்டார்கள். உறவினர் ஒருவர் இரவு உணவு எடுத்துக் கொள்வதில்லை. மதிய உணவுக்குப் பின்னர், மறுநாள் காலையில்தான் ஆகாரம். எப்படி முடிகிறதோ?

தோழி ஒருவர் அரிசிச் சோற்றைத் தொட்டு இரண்டுவருடங்கள் ஆகிவிட்டன என்று கூறியபோது அதிர்ச்சி அடைந்தேன். அப்படி இருப்பது சாத்தியமா? என்று வினவியபோது, “பழகிவிட்டது” என்றார்.

என்னதான் சாப்பிடுவார் என எனக்கு ஆவல் ஏற்பட்டதால் கேட்டேன். காலையில் ஓட்ஸ் கஞ்சி, மதியம் காய்கறி மட்டும், மாலை பால் இல்லாத கடுங்கோப்பி 1/2 தம்ளர், இரவு காய்கறி சூப் என்றார். வெளியூர் போகும்போது என்ன செய்வீர்கள்? என்று கேட்டபோது எல்லா ஊரிலும் காய்கறி கிடைக்கும். கத்தி எப்போதும் உடன் இருக்கும் என்று சொன்னார். ஏன் இந்தக் கடுமையான பத்தியம் தெரியுமா? உடல் இளைக்க.

ஒரு நாள் விரதம் இருப்பதையே ஊர் முழுக்க தம்பட்டம் அடிக்கும் மக்களிடையே இப்படியும் ஒரு சில யோகிகள் இருக்கிறார்கள். இன்னும் சிலர் உப்பு, வெள்ளை சக்கரை, கோதுமை மா ஆகிய மூன்று வெள்ளைப் பொருட்களையும் தொடுவதில்லை. இத்தகைய வைரம் பாய்ந்த மன உறுதி சாமானியர்களிடம் இல்லை. சர்க்கரை நோய் உள்ளவர்கள்கூட சமயம் கிடைக்கும்போது இனிப்பு சாப்பிட்டு விடுகிறார்கள்.

தற்போது மக்களிடம் அசைவ உணவு மோகம் அதிகரித்துள்ளது. 'விருந்து' என்றால் அது பிரியாணி விருந்தாகஇருக்கவேண்டும்என்றுஆக்கிவிட்டார்கள்.

அலுவலகத்தில் பதவி உயர்வு, பணி ஓய்வு, சக ஊழியர் கொண்டாட்டம் என்று எதுவாக இருந்தாலும் அசைவப் பிரியர்களுக்கு பிரியாணி வாங்கித்தரவேண்டும். ரமலான் நெருங்க நெருங்க வாட்ஸ்அப், முகநூல் அனைத்திலும் 'பிரியாணி' புராணம்தான்.



உடல்நலம்பேணும்இன்னொருசாரார்பண்ணும் அலப்பறைகள் சொல்லி மாறாது. சிறுதானியங்கள் உடலுக்குநல்லதுஎன்றுசொன்னாலும்சொன்னார்கள், இது பெரிய வியாபாரமாகிவிட்டது. மக்கள் அரிசியைத் தவிர்த்துவிட்டு, சிறுதானியங்களைக் கொண்டு என்னென்ன செய்ய முடியுமோ? அவ்வளவையும் செய்கிறார்கள். சில உணவகங்கள் சிறுதானிய பொங்கல், சிறுதானிய தோசை, இனிப்பு, பாயசம், ரொட்டி, சப்பாத்தி என மாற்றிக் கொண்டன.

நம் மக்களுக்கு நிறம் முக்கியம். சாதமோ, இட்லியோ வெள்ளை வெளேர் என்று இருக்க வேண்டும். சிறுதானிய தோசை, சாதம் எல்லாம் ஒரு மாதிரி பிரவுன் கலரில்தான் இருக்கும். ஆனாலும் உடலுக்கு சத்து என்று விழுங்கி வைக்கிறார்கள். அதேபோல ஆர்கானிக் மோகம் கொஞ்ச நாள் இருந்தது. அதைத் தேடி வாங்கி வந்து சமைப்பவர்கள் இருக்கிறார்கள். எந்தக் காயில், உணவில் நார்ச்சத்து உள்ளது; எதில் புரதம் உள்ளது; எதில் கொழுப்பு உள்ளது; எவற்றில் வைட்டமின்கள் உள்ளன என்று இணையத்தில் தேடிப் பிடித்து, அட்டவணை தயார் செய்து அதன்படி சாப்பிடுகிறார்கள். அப்படி இருக்கும் நிறைய பேர் உடல் பருமனுடன்தான் இருக்கிறார்கள்.

அம்மாக்கள் தங்கள் குழந்தை 'கொழுக் மொழுக்' என்று இருக்க வேண்டும் என ஆசைப்படுவார்கள். உணவைத் திணித்து அவர்களைப் பருமனாக்கி விடுகிறார்கள். அவர்கள் ஓரளவு வளர்ந்த பின்னர்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# புகை மற்றும், மதுவால் நாளாந்தம் 100 சாவுகள்

நாட்டில் புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதால் நாளொன்றுக்கு 100 மரணங்கள் பதிவாகுகின்;றன என மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தினசரி பதிவாகும் மரணங்களில் பத்துக்கு எட்டு வீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்ற நிலையில் அவற்றில் அதிகமான மரணங்கள் புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதால் ஏற்படுகின்றன.

புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதற்காக நாட்டு மக்கள் நாளொன்றுக்கு 121 கோடி ரூபா செலவழிப்பதாக தெரியவந்துள்ளது.

புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதால் நாட்டில் பொருளாதார, சுகாதார மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (05)

# உணவும் உள்ளமும்

4ம் பக்க தொடர்ச்சி...........

'குண்டு' என்று அடைமொழி சேர்ந்து கொள்கிறது. விவரம்தெரிந்தபின் பிள்ளைகள் சங்கடமாக உணர்ந்து எடை குறைப்பு முயற்சியில் தீவிரமாக இறங்குகிறார்கள். போட்ட உடல்சதை லேசில் குறைவதில்லை.

சிலர் குண்டாக இருக்கிறோமே என்றெல்லாம் கவலைப்படுவதில்லை. அவர்களின் வாய் எப்போதும் எதையாவது அரைத்துக் கொண்டே இருக்கிறது. பிரயாணம் செய்யும்போது சாப்பிட்டுக் கொண்டே, வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும்போது சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மடிக்கணினியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போதும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பரோட்டா சாப்பிடக் கூடாது என்று எண்ணிலடங்கா காணொலிகள் வருகின்றன. ஆனால் எவ்வளவு கொத்துரொட்டிக் கடைகள் உள்ளன? ஒவ்வொரு நாளும் மலையளவு கொத்து ரொட்டிகள் போடப்பட்டு அவ்வளவும் விற்றுத் தீர்ந்து விடுகின்றன.



பின் விளைவுகள், பக்க விளைவுகள் எல்லாவற்றையும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி, கவலைப்படாமல் உள்ளே தள்ளுகிறார்கள். ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான மக்கள் தங்கள் உடல் நலன், தோற்றம் குறித்து அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்.

அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. பசித்த பின் சாப்பிடுவது, அளவாக சாப்பிடுவது, சத்தான உணவை உண்பது, சுகாதாரமான உணவை உண்பது, துரித உணவைத் தவிர்ப்பது, உடற்பயிற்சி செய்வது, நொறுக்குத் தீனிகளைச் சாப்பிடாமல் இருப்பது போன்ற ஓர் ஒழுங்கைக் கடைப்பிடித்தாலே போதும். ஆரோக்கியம் நம் வசம். அதுவே அழகும்கூட.

நம்முடைய படிப்பு, வேலை, உழைப்பு, முயற்சி, பயிற்சி, தேடல், பதற்றம், கவலை, ஆர்வம் எல்லாமே இந்த ஒரு சாண் வயிற்றுக்காகவே. அந்த வயிற்றுக்கு ஒவ்வாததை எடுத்துக் கொள்ள வேண்டாம். ஒரு சிலர் அதிக உணவுக் கட்டுப்பாடுடனும், ஒரு சிலர் உணவுக் கட்டுப்பாடு இல்லாமலும் இருக்கிறார்கள். கொஞ்சம் கட்டுப்பாட்டைத் தளர்த்திக் கொண்டு ருசியான பண்டங்களை எப்போதாவது சாப்பிடலாம். தவறில்லை. நூல் பிடித்து ஒழுக வேண்டியவர்கள் மட்டுமே அப்படி இருக்கட்டும்.

பலசரக்குக் கடைக்கோ, அரிசி விற்கும் கடைக்கோ போனால் அங்கே அரிசி மூட்டைகளை முன்னால் வைத்திருப்பார்கள். கடைக்காரர்கள் பொட்டலம் கட்டிக்கொண்டிருக்கும்போது, சாமான் வாங்க வந்தவர்கள் அந்த மூடையிலிருந்து கொஞ்சம் அரிசியை எடுத்து வாயில் போட்டு அரைப்பார்கள். அதைக் கூடவா? என்று நமக்கு சிரிப்பு வரும். மனிதர்கள் பலவிதம்.

# 2024 ஜனாதிபதித் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 5 லட்சத்து 55 ஆயிரத்து 432 பேர் வாக்களிக்கத் தகுதி

## மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம தகவல்



(பாறுக் ஷிஹான்)

2024 ஜனாதிபதித் தேர்தலில் 5 லட்சத்து 55 ஆயிரத்து 432 பேர் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரிஃமாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை (ஆசனங்கள்) 04 ஆகும். அதன்படி, தொகுதிகள் பின்வருமாறு: அம்பாறை 188222 பேர், சம்மாந்துறை 99727 பேர், கல்முனை 82830 பேர், பொத்துவில் தொகுதியில் 184653 பேர் ஆகும்.

தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 645 ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 778 எனவும் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரிஃமாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

42 மையங்களில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் என்றும், ஹார்டி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் 184 வாக்களிப்பு நிலையங்களும், சம்மாந்துறையில் 93 வாக்களிப்பு நிலையங்களும், கல்முனையில் 74 வாக்களிப்பு நிலையங்களும், பொத்துவிலில் 177 வாக்களிப்பு நிலையங்களும் உள்ளடங்கலாக அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

தற்போது, சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய கட்டளைத் தளபதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு தபால் மூல வாக்குகளை வழங்குவதற்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் எதிர்காலத்தில் சபை செயலாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.(05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens

Victoria Park, Kande Ela Educational Forest Park

Lunugamvehera National Park, Yala National Park

Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Korthu Rorty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கண்டியில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 50 காசநோயாளர் பதிவு



கண்டி மாவட்டத்தில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 50 காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கண்டி வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி பசன் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

கண்டி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவக்கூடிய அபாயத்தை காட்டிலும் காச நோய் பரவக்கூடிய அபாயம் அதிகரித்துள்ளது.

காசநோய் என்பது ஒரு வகை பாக்டீரியா நோய்க்கிருமிகளால் ஏற்படும் ஒரு தொற்றுநோயாகும். இது உமிழ்நீர் மற்றும் சளி மூலமாக வேகமாக பரவக்கூடும்.

டெங்கு நோயாளர்களை 06 நாள்களுக்குள் அடையாளம் கண்டு சிகிச்சைக்காக அனுப்பி வைக்க முடியும். ஆனால் காசநோயாளர்களை 06 மாதங்களுக்குள் அடையாளம் காணுவது மிகவும் கடினமாகும்.

கண்டி நகரத்தை அண்மித்த பகுதிகளில் காசநோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகம் காணப்படுவதால் பொது மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# பண்டாரவளை பகுதியில் உழவு இயந்திரம் விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

பண்டாரவளை புனகல தோட்டத்திற்குச் சொந்தமான உடஹேன பகுதியில் செவ்வாய்க்கிழமை தேயிலை கொழுந்துகளை ஏற்ற சென்ற உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உடஹேன தோட்டத்தை சேர்ந்த 54 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த உழவு இயந்திரத்தின் சாரதி சிகிச்சைக்காக கொஸ்லந்த கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவை ஆரம்ப வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் .பிரதீப் களுபஹனவின் ஆலோசனையின் பேரில் லியங்கஹவெல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் அசேல விஜேகோன் தலைமையில் பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# நோனாகம-எம்பிலிப்பிட்டியவில் விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

இரத்தினபுரி, குட்டிகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நோனாகம - எம்பிலிப்பிட்டிய வீதியில் வேலங்கஹவெல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக குட்டிகல பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

எம்பிலிப்பிட்டியவிலிருந்து நோனாகம நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியின் வலது பக்கமாகத் திரும்ப முயன்ற போது பின்புறத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிள்களின் செலுத்துனர்கள் இருவரும் காயமடைந்துள்ள நிலையில் பதலங்கல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி பதலங்கல பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியில் ஓய்வுபெறும் ஆசிரியருக்கு பிரியாவிடை







(எம்.எப்.றிபாஸ்)

அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெறும் ஏ.சீ.எஹியாவை பாராட்டி கெளரவிக்கும் நிகழ்வு அதிபர் ஏ.எம்.எம்.,த்ரீஸ் தலைமையில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

'விடைபெறும் வித்தகர் சேவை நாலன் பாராட்டு விழா' எனும் தொனிப் பொருளில் பாடசாலையின் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற ,ந்நிகழ்வில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றஸ்மி பிரதம அதிதியாகவும், ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.ஏ.சமது, அதிபர்களான எஸ். எம். சாஹிர் ஹுசைன், எம். எச்.எம.உவைஸ், ஏனைய பாடசாலைகளின் அதிபர்களான எம். ஏ. சீ. அன்சார், ஏ.ஜீ. ஏ. சஹூர், எம். எம். அஹ்சாத், எஸ். எம். றகீம், ஏ.ஆர்.ஜப்ராஸ், ஏ.அஸ்மி,எம்.எஸ்.பாஹிம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் பழைய மாணவர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் சேவையில் சுமார் 32 வருடங்களாக சேவையாற்றிய எஹியா ஆசிரியரின் சேவையைப் பாராட்டி கலந்து கொண்ட அதிதிகளால் பொன்னாடை போத்தி, நினைவு சின்னங்களும், பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. எமது கட்சி உறுப்பினர்களிடத்திலும் இருக்கிறது.

கட்சி எடுத்த முடிவு சரியோ, தவறோ என்பதற்கு அப்பால் தனிப்பட்ட ரீதியிலே இந்த முடிவோடு நான் இணங்கவில்லை. மக்களால் விரும்பம்படுகின்ற மக்கள் தேர்தெடுத்த முடிவாக இதனை நான் கருதவில்லை. தேர்தல் முடிவுகளிற்கு பின்னர் இந்த பொதுக்கட்டமைப்பில் உள்ளவர்கள் திருந்துவதற்கான ஒரு வாய்ப்பை இந்தத் தேர்தல் நிச்சயமாக கொடுக்கும்.

தேர்தலில்நிற்கும்மூன்றுவேட்பாளர்களின் பெயர்கள்மக்கள்மனங்களிலே இருக்கின்றது. மக்கள் தீர்க்கமான சரியான முடிவை எடுப்பார்கள். பெரும்பான்மையான மக்கள் எடுத்த முடிவிற்கு ஆதரவாக நானும் செயற்படுவேன்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவைதேர்தல்அறிவிக்கப்பட்டபின்னரும் பல தடைவைகளுக்கு மேல் சந்தித்திருக்கின்றேன். வன்னி மாவட்டத்தினுடைய அபிவிருத்திதிட்டங்களுக்கானநிதிஒதுக்கங்கள் சம்மந்தமாக அவருடன் கலந்துரையாடியுள்ளேன் என்றார்.(100)

## ரணிலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளரை ஆதரிப்பது என்கிற முடிவினை எடுத்துள்ளது.

மேலும் பொதுக்கட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கும்போது எப்படிச் செல்வது என்பது தொடர்பில் குறிப்பிட்ட நேரம் வரையே கலந்துரையாடல் இடம்பெற்றது. கட்சிகள் தனித்தனியாகச் செல்வதை விடுத்து சேர்ந்து செல்வது, அத்துடன் அவர்களுடையகடிதத்தில் என்னென்ன வலியுறுத்தப்பட்டுள்ளதோ அதன் பிரகாரம் ஒரு முடிவினை எடுத்துச் செல்வது என்பன தொடர்பில் நாங்கள் ஒரு தீர்மானம் எடுத்துள்ளோம்.

அனுரகுமாராவின் தேர்தல் அறிக்கையில் பாதுகாப்புபடையினர்தொடர்பாகவும்குறிப்பாக மனித உரிமை மீறல்களை செய்தவர்களை காப்பாற்றுவதுதொடர்பாகவும்குறிப்பிட்டுள்ளார். இவர்கள்தான் வடக்கு கிழக்கை பிரித்தவர்கள். என்னைப் பொருத்தவரை எங்கள் மக்கள் அனுரவைப் பற்றி சிந்திக்கவில்லை என்பதுதான் உண்மை.

எங்களது அடித்தளத்தை உடைத்து எறிந்தவர்கள் ஜேவிபியினரே. இணைந்த வடக்கு கிழக்கிற்காக எங்களுடைய போராளிகள், இயக்கங்கள் எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர்கள். அதனை உடைத்த பெருமை ஜேவிபினருக்கு இருக்கின்றது.

அவர்கள் என்னதான் தேனும், பாலும் ஓடுமென்று கூறினாலும்கூட அவர்களுக்கு தமிழர் பகுதிகளில் வாக்கு போடுவது என்பது கடினமாகத்தான் இருக்கும்.

எமது மனங்களிலே நீறு பூத்த நெருப்பாக எமது விடுதலை வேட்கை இருக்கின்றது. இந்நிலையில் நமது சங்கு சின்னத்தின் ஊடாக தென்னிலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் நாங்கள் எல்லோரும் ஒன்றாக நிற்கின்றோம் என்ற செய்தியை சொல்ல வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக இருக்கின்றது.

ரெலோ ஒரு முடிவெடுத்தால் அதிலிருந்து பின்வாங்காது. ஜனாதிபதியை நாங்கள் மூவர் சென்று சந்தித்தது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழுங்கப்போகிறோம் என்று பலர் எம் மீது சேறு பூசுகிறார்கள். ஆனால் ஒருபோதும் நாம் ரணிலை ஆதரிக்கவேமாட்டோம்.

ரெலோ மக்களுடைய சிந்தனையின் அடிப்படையில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என எண்ணுபவர்கள். எந்த நிலையிலும் தென் இலங்கை வேட்பாளர்களுக்கு விரல் நீட்டுகின்ற நிலை ஏற்படாது - என்றார்.

(100)

## கடவுச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே சாதாரண சேவையின் கீழ் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட காலம் முடிவடைந்தும் கடவுச்சீட்டினைப் பெறாதவர்கள் 10 நபர்கள் என ஒரு நாளைக்கு 60 பேருக்கு கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

ஒருநாள்சேவையின்கீழ்கடவுச்சீட்டினை பெறுவதற்கு, அத்தியாவசிய தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப் படையிலும் கடவுச்சீட்டு விநியோகிக்கப் படுகின்றன.

இந்நிலையில், வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்பாக கடந்த ஐந்து நாட்களாக வரிசையில் நின்றும் தமக்கும் இது வரை கடவுச்சீட்டு கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்து திணைக்கள காரியாலயம் முன்பாக நின்ற மக்களால் நேற்றுக் குழப்பத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து வவுனியா பொலிஸார் அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டு அவ்விடத்தில் நிலவிய அசாதாரண நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளை திணைக்கள வாயில் முன்பாக வரவழைத்து வரிசையில் நின்ற மக்களுக்கு தற்போதைய நிலமை தொடர்பில் தெளிவூட்டல் வழங்கப்பட்டமையினையடுத்து நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மேலும், கடவுச்சீட்டினை இன்று பெறுவதற்காக மக்கள் தொடர்ச்சியாக வரிசையில் காத்திருக்கின்றமையுடன் சாதாரண சேவையின் கீழ் மார்ச் மாதம் விண்ணப்பித்து கடவுச்சீட்டுபெறாதவர்கள்,வெளிநாட்டியிலிருந்து வருகை தந்தவர்கள் மீண்டும் நாட்டிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு கலாவதியானவர்கள், மாணவர்கள், சகோதரங்களில் திருமணத்திற்கு செல்லவுள்ளவர்கள், வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பு ஆவணம் கிடைத்தும் கடவுச்சீட்டு இல்லாதவர்கள் என பலரும் இவ்வரிசையில் காத்திருகின்றனர்.

(100)

## பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், பொதுஅமைப்புக்கள் என பலரும்கலந்துகொண்டு, துண்டறிக்கைகளை விநியோகித்தனர். (100)




காலைக்கதிர் Kalaikkathir

# மாவட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்டக் கிளைக்குப் புதியவர்கள்



ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட கட்சி பணியாளர் நியமனங்களை ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இதன்படி கண்டி மாவட்ட அமைப்பாளர் எம். விக்கினேஸ்வரன், மாவட்ட செயலாளர் குலேந்திரன் கணேசன், மாவட்ட பொருளாளர் எம். கிருஸ்ணகுமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம். கே. வினோத் ஆகியோர் கட்சி பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் எஸ்.சசிகுமார், கண்டி மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளராக நியமிக்கபட்டுள்ளார்.

கட்சியின் தென் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வில் கட்சியின் தவிசாளர் பொ. ஜெயபாலன், பிரசார செயலாளர் பரணிதரன் முருகேசு ஆகியோருடன், நியமனங்களை பெற்றுகொன்டவர்களும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறுகையில் –

கண்டி மாவட்ட தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம், நமது கட்சி போராடி பெற்றுக்கொண்ட கண்டி மாவட்ட தமிழ் மக்களுக்கு உரிய கௌரவமாகும்.

இதை தனிப்பட்ட நபர்கள் எவரும் பறித்து உரிமை கொண்டாட முடியாது.

அரசியல் வழி பாதையில் நாம் சந்தித்த எத்தனையோ சவால்களில் இது மிகவும் சிறிய ஒரு சம்பவமாகும்.

ஆனால், கண்டி மாவட்ட தமிழர்களின் தேசிய மட்ட, மாகாண மட்ட, உள்ளூராட்சி மட்ட பிரதிநிதித்துவங்கள் என்பன விலை மதிக்க முடியாத கண்டி மாவட்ட மக்களின் உரிமை கோஷங்கள் ஆகும்.

இந்த கோஷங்களை நாம் தொடர்ந்து முன் கொண்டு செல்வோம். - என்றார். (05)

# இலங்கை தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் ஆஸ்திரேலியாவில் விபரீத முடிவெடுப்பு

## அரசின் கொள்கைகளே காரணம் எனக் குற்றச்சாட்டு

இலங்கையை சேர்ந்த தமிழ் புகலிடக்கோரிக் கையாளர் தற்கொலை செய்துகொண்டுள்ள நிலையில் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் புகலிடக்கொள்கையே அவரின் மரணத்திற்கு காரணம் என தமிழ் அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ் அகதிகள் பேரவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

தன்னைத் தானே தீக்கிரையாக்கிக் கொண்டு இளைஞன் மரணம். 23 வயதேயான இந்த இளைஞனை ஆஸ்திரேலியா அரசாங்கமும், அரசாங்கத்தின் அகதிகள் மீதான மோசமான கொள்கைகளுமே படுகொலை செய்துள்ளன.

அவனது மரணப்படுக்கையின் கடைசி நொடிகளில் அவரோடு கூட இருந்த ரதி கூறியது இதுதான். ‘பல எதிர்கால கனவுகளோடும், வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற லட்சியத்தோடும் வாழ்ந்த 23 வயதான இளைஞன் மனோ. உள்நாட்டுப் போரில் பாதுகாப்புத் தேடி வந்த ஓர் இளைஞனை இந்த நாட்டின் மனிதத் தன்மையற்ற அகதிகளுக்கு விரோதமான போக்கு, அதன் மூலம் அவன் சந்தித்த தனிப்பட்ட, சமூகப் பிரச்சினைகள் வாழ்வின் மீதான நம்பிக்கை இழக்கச் செய்ததோடு இனி வாழ்வதே வீணென்று இத்தகைய பாரதூரமான முடிவை எடுக்கச் செய்துள்ளது.

கடந்த 12 ஆண்டுகளில் எத்தனையோ அப்பாவி அகதிகளின் அகால மரணங்களை நாங்கள் கடந்து வந்துள்ளோம். இதோ இன்று இன்னொரு இளைஞன். இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கும் பல தமிழ் அகதிகள் போல் பாதுகாப்பற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு ஒவ்வொரு நாள் விடியலையும் தங்களுக்கு மாற்றம் ஏற்பட்டு விடும் என்று கனவுகளோடு; இங்கிருந்து ஆபத்து நிறைந்த தங்கள் நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டு விடுவோமோ என்ற பயத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் பல அகதிகளின் ஒருவரின் மரணம் இது.’

கிறிஸ்துவ குடும்பத்தை பின்னணியாகக் கொண்ட மனோ இலங்கை இனவழிப்பு போரின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு குடும்பமாக தனது பன்னிரண்டாவது வயதில் அவரது நான்கு சகோதரர்களோடு 2013 ஆம் ஆண்டு கப்பல் வழிப் பயணத்தால் ஆஸ்திரேலிய வந்தடைந்தார். இங்கு வந்து பல மாத தடுப்பு காவலுக்கு பிறகு சமூகத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

செவ்வாய் அன்று தனக்குத்தானே தீயிட்டுக் கொளுத்தி 80 சதவீத தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நேற்று 12.27 மணி அளவில் தன் மூச்சை நிறுத்திக் கொண்டான் அந்த இளைஞன்.

மகிழ்ச்சியாக சாமானியமான வாழ்க்கையை வாழ வேண்டிய ஓர் இளைஞனை இத்தகைய மன உளைச்சலுக்கு உள்ளாக்கி அவன் தனது உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு தள்ளியுள்ளது இந்த நிரந்தரமற்ற அகதி வாழ்க்கை.

ஆஸ்திரேலியா அரசாங்கம் இத்தனை ஆண்டுகளாகியும் தஞ்சகோரிக்கையை அங்கீகரிக்காத பட்சத்தில் மேலும் இலங்கைக்கு அகதிகளை அனுப்ப முற்படும் என்றால் இங்கிருந்து மரணிப்பதே மேல் என்று பல அகதிகள் எண்ணங்கள் மாறி இருப்பது அவர்கள் வாழ்வின் மீதான போர் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்தகைய சோர்வடைந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல உண்மையான மனநிலை என்று ஓர் இளைஞன் தன் உயிரைத் தீக்கிரையாக்கி உணர்த்திச் சென்றுள்ளான் அனைவருக்கும். ஒரே மாதத்தில் இரு அகதிகளை இழந்துள்ளோம். இது இதோடு முடியப்போவதும் இல்லை என்ற பயம் எங்கள் அனைவரையும் ஆட்கொண்டுள்ளது. - என்றுள்ளது.

(05)

# கொழும்பு பங்குப் பரிவர்த்தனை - தென்கிழக்கு பல்கலை இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவை ஒலுவிலிலுள்ள இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இளங்கலைப் பட்டதாரிகளுக்கிடையில் நிதியியல் அறிவை மேம்படுத்தும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன.

இக்கூட்டு முயற்சியானது, மாணவர்களை நிதியியல் உலகுக்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களுடன் தேர்ச்சிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இக்கூட்டாண்மை மூலம், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து, மாணவர்களை மூலதனச் சந்தைக்கு வெளிக்கொணர்வதற்கான கல்வித் திட்டங்கள், பயிலரங்குகள் மற்றும் பணிக்களப்பயிற்சியுடனான கல்வி ஆகியவற்றை உருவாக்குகின்றன.

கணக்கியல், நிதி, வணிக முகாமைத் துவம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இல் வழங்கப்படும், பணிக்களப் பயிற்சியுடனான கல்வியின் மூலம் நடைமுறை அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள்.

மேலும், நிதி முகாமைத்துவ விஷேட தேர்ச்சிக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் அதி‘தரப் புள்ளி சராசரியை’ பெற்ற மாணவருக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை விருது வழங்கவுள்ளது.

எதிர்கால டிப்ளோமா திட்டங்களுக்கு நிபுணத்துவம் மற்றும் வளங்களை வழங்குதல் மற்றும் பாடநெறி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிகழ்காலத்தில் முன்னெடுத்துவரும் கல்வி முயற்சிகளுக்கும் பல்கலைக்கழகம் தனது பங்களிப்பை வழங்கும்.

இக்கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி யு.எல். அப்துல் மஜீத் –

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தென்கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். இக்கூட்டு முயற்சியின் மூலம், நாங்கள் எங்கள் மாணவர்களுக்கு அறிவை மட்டுமல்ல, அவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கத் தேவையான அத்தியாவசிய திறன்கள் மற்றும் தொழில்துறைக்கான வெளிப்பாட்டையும் வழங்குவோம். சி.எஸ்.ஈ. வழங்கும் வாய்ப்புகள் நிச்சயமாக எங்கள் மாணவர்களை சிறந்த முறையில் மேம்படுத்தி, நிதி மற்றும் மூலதனச் சந்தைத் துறைகளில் வெற்றிகரமான தொழில்களுக்கு அவர்களைத் தயார்படுத்தும். – எனக் குறிப்பிட்டார்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சந்தைப்படுத்தல் பிரிவின் சிரேஷ்ட பிரதித் தலைவர் திரு. நிரோஷன் விஜேசுந்தர, மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

‘இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களிடையே நிதி அறிவை வளர்ப்பதற்காக பல்கலைக்கழகத்துடன் கைகோர்ப்பதைக் குறித்து நாம் பெருமிதம் கொள்கிறோம்.

இக்கூட்டு முயற்சி இன்றியமையாதது, ஏனெனில் இது மாணவர்களுக்கான நடைமுறை அனுபவத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பட்டியலிடப்பட்ட 285 நிறுவனங்களுக்குள் வேலைவாய்ப்புகளையும் அவர்களுக்கு வழங்குகிறது’. அவர் மேலும், ‘இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், சந்தேகத்திற்கு இடமின்றி மாணவர்களுக்கு அத்தியாவசியத் தகுதிகளைப் பெறுவதற்கான பல கல்வித் திட்டங்களை மலிவாக அனுகக்கூடியவாறு வணிகமயமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இம்முன்முயற்சியானது, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளையில், தனியார் துறையின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான திறன்களை அடுத்த தலைமுறை தலைவர்களுக்கு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் என நாங்கள் நம்புகிறோம்.’ எனக் குறிப்பிட்டார்.(05)

# கடற்படை பிரதம அதிகாரியாக காஞ்சன பனாகொட நியமனம்



ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொட இலங்கை கடற் படையின் புதிய பிரதம அதிகாரியாக முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2024 ஒகஸ்ட் 16ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அவரது நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவினால் கடற்படை தலைமையகத்தில் அது தொடர்பான நியமனம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க இப்பதவியை வகித்து வந்தார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# 2025க்கான இலவசப் பாட நூல்களை அச்சிட அமைச்சரவை அங்கீகாரம்

2025ஆம்ஆண்டில்பாடசாலைமாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ள பாடநூல்களை அச்சிடுவதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025ஆம்ஆண்டுக்குத்தேவையானபாடசாலைப் பாடநூல்களை அச்சிடுவதற்காக 317 வகையான பாடநூல்களில் 71வகையான பாடநூல்களை அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அச்சிடுவதற்காக 2024.04.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2025ஆம்ஆண்டில்பாடசாலைமாணவர்களுக்கு இலவசமாக பாடநூல்களை விநியோகிப்பதற்குத் தேவையான எஞ்சியுள்ள 246 பாடநூல் வகைகளை அச்சிடுவதற்காக தேசிய போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய, விவரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களை வழங்கியுள்ள குறைந்த விலைமனுவை சமர்ப்பித்துள்ள 24 அச்சகங்களுக்கு, 1, 6 மற்றும் 10 ஆம் தரங்கள் தவிர்ந்த ஏனைய தரங்களுக்கான பாடநூல்களை அச்சிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(05)

# முகநூல் வழி நண்பர்களுடன் போதைப்பொருள் விருந்து

## 43 இளைஞர், யுவதிகள் கைது

நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் முகநூலில் அறிமுகமான நண்பர்களுடன் இணைந்து போதைப்பொருள் விருந்து நடத்தியதாகக் கூறப்படும் 43 இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மதுவரி திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மதுவரி திணைக்களத்தின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை, மாரவில, கிரிந்திவெல, ஹிங்குரக்கொட, பூகொடை, நீர்கொழும்பு, ஜா - எல மற்றும் ஹொரணை ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த 19 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 10 யுவதிகளும் 33 இளைஞர்களும் அடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களில் பல்கலைக்கழக மாணவர்களும், வர்த்தகர்களும் காணப்படுகின்;றனர் என அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின், கஞ்சா மற்றும் சிகரெட்டுகள் ஆகிய போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.(05)

# புத்தளத்தில் வெவ்வேறு பகுதிகளில் பீடி இலை பொதிகள் மீட்கப்பட்டன

புத்தளம், கற்பிட்டி, உச்சமுனை மற்றும் முந்தல் ஆகிய கடற்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 748.6 கிலோ கிராம் பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதன்படி, புத்தளம் கற்பிட்டி உச்சமுனை கடற்கரைபகுதியிலிருந்து 499 கிலோ கிராம் நிறையுடைய 15 பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் புத்தளம் முந்தல் கடற்கரைபகுதியிலிருந்து 249.6 கிலோ கிராம் நிறையுடைய 07 பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பீடி இலைபொதிகள் மேலதிக விசாரணைகளுக்காகக் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.(05)

# சந்தேக நபரொருவர் கோடாவுடன் கைது

கம்பஹா, மீரிகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டுவாகெலே பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

மீரிகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா, மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 2,160 (12 பெரல்கள்) லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கிளிநொச்சி ஏ–9 வீதியில் விபத்து 2 பிள்ளைகளின் தந்தை இறப்பு



கிளிநொச்சி ஏ-9 வீதியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கனகாம்பிகைக் குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

155ஆம் கட்டை சந்தியில் ஆள்களை ஏற்றுவதற்காகப் பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றைக் கடந்து சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த பார ஊர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான பார ஊர்தியின் சாரதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2024இல் வெளியிடப்பெற்றது